2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

143—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***2879—திரு. எம்.சி. சண்முகையா:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், எல்லை நாயக்கன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகக் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கருங்குளம் ஒன்றியம், எல்லை நாயக்கன்பட்டி ஊராட்சியின் மக்கள்தொகை 3,178 ஆகும். இவ்வூராட்சியில் எல்லை நாயக்கன்பட்டி, தெய்வச்செயல்புரம், செட்டிமலான்பட்டி மற்றும் பொட்டலூரரணி ஆகிய கிராமங்கள் உள்ளன. இவ்வூராட்சியில் வடிவமைக்கப்பட்ட குடிநீரின் அளவு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என்ற விகிதத்தில் 1.75 இலட்சம் லிட்டர் தண்ணீராகும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட 76 குடியிருப்புகளுக்குக் கருங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் நாளொன்றுக்கு 1.27 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்பிலுள்ள நீராதாரத்தின்மூலம் நாளொன்றுக்கு 0.48 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆக மொத்தம், நாளொன்றுக்குத் தேவையான 1.75 இலட்சம் லிட்டர் குடிநீர் இந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2023 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், எல்லை நாயக்கன்பட்டி, தெய்வச்செயல்புரம், பொட்டலூரணி, செட்டிமலான்பட்டி ஆகிய கிராமங்களில் சுமார் 6 ஆயிரம் மக்கள் வசித்து வருகிறார்கள். இப்பகுதிக்குத் தாமிரபரணி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 2 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் வழங்கப்படுகிறது. உள்ளூர் நீராதாரத்தின்மூலம் கிடைக்கக்கூடிய தண்ணீர் உவர்ப்புத் தன்மையுடன் இருப்பதால் குடிப்பதற்குப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலனை செய்து, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இப்பகுதிக்குத் தினசரி குடிநீர் வழங்க ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகின்ற குடிநீர் என்பது போதுமான அளவாக இருக்கிறது என்பதுதான் துறையிலிருந்து எனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரிகளினுடைய அறிக்கை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மீண்டும் அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, அந்தப் பகுதியிலே தண்ணீர் அதிகமாக தேவை என்று சொன்னால் புதிய திட்டமாக இல்லாமல், இதையே அதிக அளவில் கொண்டுவர முடியுமா என்பதை ஆராய்ந்து அதைத் தருவதற்கு உரிய முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச்*

2023 ஏப்ரல் 12]

சொல்லிக்கொள்கிறேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதி என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, 78 கிராம ஊராட்சிகளும், தூத்துக்குடி மாநகராட்சியில் 11 வார்டுகளும் அமைந்துள்ள பகுதியாகும். என்னுடைய தொகுதியில்தான் தாமிரபரணி ஆறு ஓடுகிறது. இப்பகுதியில் அனைத்துக் கிராமங்களுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் சரிவர கிடைப்பதில்லை. உள்ளூர் நீராதாரம்மூலம் கிடைக்கக்கூடிய நீர் உவர்ப்பு நீராக இருப்பதால், குடிப்பதற்கு உகந்ததாக இல்லை.

மக்கள்தொகைப்பெருக்கத்தின் காரணமாக குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆகவே, இத்தொகுதி முழுவதும் அனைத்துக் கிராமங்களுக்கும் தாமிரபரணி ஆற்றில் அகரத்திலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் புதியதாக உருவாக்கி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு, கனிவோடு பரிசீலனை செய்து, திட்டத்தினை நிறைவேற்றித்தர ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற 4.53 கோடி மக்களுக்குத் தினந்தோறும் 2,104* MLD *அளவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக தண்ணீர் வழங்கிக் கொண்டு வருகிறோம். சில இடங்களில் 20 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலம் ஆகிவிட்ட காரணத்தால் ஒன்று மோட்டார் பழுதடைந்திருக்கலாம் அல்லது மோட்டாருடைய* Horse power *குறைந்திருக்கலாம் அல்லது* pipeline *பழுதடைந்திருக்கலாம். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் இவை குறித்தெல்லாம் எங்களுக்குக் கோரிக்கை தந்துகொண்டு இருக்கிறார்கள். நேற்றுகூட 20-க்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியிலே உள்ள பேரூராட்சியிலே தண்ணீர் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, நம்முடைய திரு. செ. ராஜேஷ் குமார் சொல்லியிருக்கிறார். நேற்று மாலை அதிகாரிகளோடு கலந்துபேசி, அனைத்து இடங்களுக்குமே அதிகாரிகளை அனுப்பி, இவற்றை உடனடியாகச் சரி செய்ய முடியுமா; இல்லையென்றால் என்ன செய்து அவற்றைச் சரி செய்ய வேண்டும்; ஏனென்றால் வெயில் காலம் என்பதால் தண்ணீரை*

உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று ஆய்வுக் கூட்டம் நடத்தி அதிகாரிகள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருக்கு அந்தத் தொகுதியைப்பற்றி எவ்வளவு முழுமையாகத் தெரியுமோ அந்த அளவுக்கு எனக்கும் அந்தத் தொகுதியிலே முழு பரிச்சயம் உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏனென்றால் தேர்தலுக்கு நீங்கள்தானே தலைமை தாங்கி நடத்தினீர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: எனவே, கருங்குளம் பகுதி, திருநெல்வேலி அருகிலே இருக்கிற பகுதி. தாமிரபரணி ஆறு அவர் பகுதியிலே ஓடுகிறது என்பது நன்றாகத் தெரியும். அதிகாரிகளுடன் ஆராய்ந்து அதை எவ்வளவு அதிகப்படுத்தித் தரமுடியுமோ அதைத் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திங்கள்நகர் பகுதியிலே பள்ளம்பாலம் என்ற ஒரு பகுதி இருக்கின்றது. அது வள்ளியாறு செல்லக்கூடிய இடம். அந்தப் பகுதியிலே குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. குறிப்பாக, திங்கள்நகர், கட்டிமாங்கோடு, குருந்தன்கோடு பகுதிகளில் தண்ணீர் இல்லை. இது செழுமையான மாவட்டமாக இருந்தாலும் தண்ணீரைச் சரியாக சேமித்து வைக்க முடியவில்லை. அதை விநியோகம் செய்வதில் தவறு இருக்கிறது. பள்ளம்பாலம் பகுதியில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கினால் நிச்சயமாக குடிநீர் தாராளமாகக் கிடைக்கும்; சேமிக்க முடியும்; மக்களுக்கு அதைப் பகிர முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெள்ளிமலை Town Panchayat-லும் தண்ணீரே இல்லை. அந்தப் பகுதியிலும் வள்ளியாற்றின் ஓரத்திலும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்தால் நிச்சயமாக மக்களுக்குப் பயனளிக்கும். அதைத் தாங்கள் செய்து தருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்குமே நான் தெரிவிக்க விரும்புவது, கிட்டத்தட்ட இந்த ஆட்சி ஏற்பட்டு 20 மாதக் காலத்தில் 26-க்கும் மேற்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மேலும், இப்போது 58 இடங்களிலே புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைக் கொண்டு வருவதற்குரிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அந்தப் பணிகளைத் தொடங்கவும் இருக்கிறோம். எனவே, இவற்றையெல்லாம் ஆராய்ந்து ஒவ்வோர் இடம் குறித்தும் விரிவான திட்ட அறிக்கை முதலிலே தயாரிக்க வேண்டும். திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பிறகு அதற்கான நிதியாதாரங்களைச் சேகரிக்க வேண்டும். நிதியாதாரங்களைச் சேகரித்து* tender *விடுவதற்குக் கொஞ்சம் தாமதம் ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்த ஊரை எழுதித் தாருங்கள். நான் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கச் சொல்லி ஏற்பாடு செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்*

முற்பகல் 10-30

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சொல்லியிருக்கின்றார்கள். இருந்தாலும், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், விசூர், தண்டரை போன்ற ஊராட்சிகள் செய்யாறிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்றன. இப்பகுதி மக்களுக்கு செய்யாறு குடிநீர் வேண்டுமென்ற கோரிக்கையும், அதேபோல பாலாற்றிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அன்னாத்தூர், தண்டரை, சித்தனக்காவூர் போன்ற கிராமங்களுக்கும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தின்கீழ் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை உடனடியாகச் செயல்படுத்த முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 12

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, செயலாக்கத்திலுள்ள குடிநீர்த் திட்டங்கள், ஆறுகள் அருகிலிருந்தால்கூட அதிலிருந்து தண்ணீர் எடுத்து இவர்களுக்குக் கொடுப்பதென்பது இயலாத காரியம். அதை ஆராய வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கின்ற தண்ணீர் அதிகமாக இருக்குமென்றால், பிரித்துக் கொடுக்கலாம். இல்லையென்றால், அதைக் கொடுப்பது சிரமம். உடனடியாக ஏதோ பேசிவிட்டு போவதில்லை. குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளை அழைத்து, இதை என்ன செய்யலாம் என்பதை ஆராய்ந்து, அதற்குரிய பதிலை நேரடியாக உறுப்பினர்களுக்குக் கடிதம்மூலம் தெரிவிப்பதைத்தான் வழக்கமாகக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014 ஆம் ஆண்டு திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மானூர் பஞ்சாயத்து யூனியனில் 57 கோடி ரூபாய்க்கு புதிய மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் போடப்பட்டு, ஒப்பந்ததாரர் பிரச்சினையினால் இந்தத் திட்டம் இன்னும் முழுமை பெறாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளையும், ஒப்பந்ததாரரையும் அழைத்துப் பேசி, அதை முடித்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று திருநெல்வேலியின் ஆணையர் இங்கு வந்திருந்தார். அவரிடம் எந்தெந்தத் திட்டங்கள் செயல்படாமல் இருக்கின்றன, அதற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் அறிந்தேன். குடிநீர் வடிகால் வாரியத்தின் இந்தப் பணிகளை எடுக்கின்ற ஒப்பந்ததாரர்கள், நீண்டகாலமாகின்ற காரணத்தால் ஒரு சில இடங்களில் பணிகளை நிறுத்திவிட்டு போய்விடுகிறார்கள். ஒரு சில இடங்களில் ஆட்கள் பற்றாக்குறையால் பணிகள் நின்றுவிடுகின்றன. அதை மறுத்து, உடனடியாக வேறு tender வைக்க வேண்டுமென்றால், நிதி அதிகமாகிவிடும். இல்லையென்றால் அவர்கள், arbitration-க்கு போய்விடுவார்கள். இதனால் சிரமங்கள்

2023 ஏப்ரல் 12]

ஏற்படுகின்றன. அதே contractor, ஒப்பந்ததாரரை அழைத்து இதை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

144—

குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

***8591—திரு. துரை. சந்திரசேகர்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், செம்பாசிகுப்பம் கிராமத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், லைட்ஹவுஸ்குப்பம் ஊராட்சி, செம்பாசிகுப்பம் கிராமத்தில் தொண்டு நிறுவனம்மூலம் 2019–2020 ஆம் ஆண்டு ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. தற்போது புதிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக்காலம் தொடங்கிவிட்டால் மீஞ்சூரைச் சுற்றியுள்ள கடற்கரைக் கிராமங்களில் குறிப்பாக, நெய்தவாயல், வயலூர், காட்டூர், மேரட்டூர், திருவெள்ளைவாயல், நந்தியம்பாக்கம், வல்லூர், அத்திப்பட்டு போன்ற கிராமங்களுக்குள் உப்புநீர்